தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் கழகம்
(நிர்வாகக் கிளை)

அனுப்புநர்

பொறிஞர். இரா. கிருஷ்ணமூர்த்தி., B.E.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு, (கூ.பொ)
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப்
பொறியாளர்கள்.

கடித எண். 044434/269/ஜி43/ஜி431/2021, நாள்:19.07.2021.

ஐயா,

பொருள்: நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுபணி உத்தரவு (Diversion Order) — ரத்து செய்வது — குறித்து - அறிவுறுத்தல் வழங்குவது- தொடர்பாக.

பார்வை : 1. இவ்வலுவலக கடித எண்.053486/771/ஜி43/ஜி431/2019, நாள்:11.07.2019.
2. இவ்வலுவலக கடித எண்.053486/771/ஜி43/ ஜி431/2019-2, நாள்:18.07.2019.

-----

பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதங்களின் வாயிலாக மாற்றுபணி (Diversion Orders) உத்தரவில் பணிபுரியும் களப்பணியாாளர்கள் மட்டுமல்லாமல் அனைத்து மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு அலுவலர் (Assessment Staff & Officers), எழுத்துத்துறை சார்ந்த பணி (Provincial Staff & Officers) மற்றும், தொழில் நுட்ப பணியாளர் (Technical Assistants) பொறியாளர்கள் (Engineers) மற்றும் உள்ள "அனைத்து பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர் அனைவருக்கும்" வழங்கப்பட்டுள்ள மாற்றுபணி (Diversion Order) உத்தரவுகளை ரத்து செய்து அவர்கள் அனைவரையும் அவரவர் சொந்த பணியிடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

2) செயற்பொறியாளர் அலுவலகம், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், பொது கட்டுமான வட்டங்கள் மற்றும் தலைமை பொறியாளர் அலுவலகங்களில் களப்பணி தொழிலாளர்கள் பணி புரிந்து வருவதாக தொழிற்சங்கங்கள் புகார் கூறி வருகின்றன.

3) எனவே, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மாற்றுபணி (Diversion Order) உத்தரவுகள் அனைத்தையும் பார்வை (1) மற்றும் (2)-ல் வழங்கப்பட்டுள்ள உத்தரவுகளின்படி உடனடியாக ரத்து செய்து அதற்கான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு 27.07.2021-க்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள.

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு(கூ.பொ)

நகல்:- அனைத்து இயக்குநர்கள். ] (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)
செயலர் /செயலகக்கிளை.]

E:\G43-18.02.2021\Divesion Letter .docx